(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO. 262/2022 அ.சா.11**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. மகாலெட்சுமி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 18.08.2025.

( 5ம் எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். மற்ற எதிரிகள் ஆஜர்.)

முதல் விசாரணை:-

நான் தற்போது கருப்பாயூரணியில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் பெயர் பால்பாண்டி. ஆஜர் எதிரிகளை தெரியும். 03.05.2019-ம் தேதி என் வீட்டுக்காரர் காலையில் சாப்பிட்டு விட்டு காமராஜபுரத்திற்கு அவரது மூத்த மனைவி வீட்டுக்கு சென்றார். மதியம் 12.30 மணியளவில் போன் செய்து மதுரைக்கு சாமான் வாங்க போகவேண்டுமென்று நெல்பேட்டைக்கு வரச்சொன்னார். தான் மகாலிபட்டியில் ஒர்க் ஷாப்பில் உட்கார்ந்திருப்பதாக எனக்கு சொன்னார். நான் மதியம் 1.30 மணியளவில் மதுரை

நெல்பேட்டைக்கு போனேன். அவர் அங்கு வரவில்லை. எனக்கு என் அக்கா மகன் (மூத்ததாரத்து மகன்) மதியம் 2.15 மணிக்கு போன் செய்து என் கணவரை வெட்டிவிட்டதாக மச்சபாலா, சைனாபிரபா, நெல்சன், புல்லட் மணி ஆகியோர்கள் என் கணவரை வெட்டிவிட்டதாக தகவல் சொன்னார். நான் மகாலிபட்டிக்கு போன் சம்பவ இடத்தை பார்த்தேன். அப்போது என் கணவர் இறந்துகிடந்தார். இது சம்பந்தமாக என் அக்கா மகன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னிடம் வீடியோ புட்டேஜ் காண்பித்தார்கள். அதில் நெல்சன் வண்டியில் உட்காந்திருந்தார். 3 பேர் என் கணவரை பட்டா கத்தி போன் ஆயுதத்தால் வெட்டினார்கள். அதுபற்றி போலீசார் என்னிடம் விசாரித்தார்கள். நாங்கள் 2 வருடத்திற்கு முன் அரசாங்க பார் வைத்திருந்தோம் அதை பார்க்கமுடியாமல் என் கணவர் விட்டுவிட்டார் சம்பவத்திற்கு 2 நாட்கள் முன் என் கணவர் எனக்கு போன் செய்து சபாரத்தினம் பயலுங்க கஞ்சா வியாபாரம் பார்ப்பதாகவும் அதை செய்யக்கூடாது என தான் தடுத்ததாகவும், அவர்கள் லோடு சிக்கி விட்டதாகவும், அதற்கு தான் தான் காரணம் என்பதாகவும் அவர்கள் சுத்தி திரிவதாகவும் என்னிடம் சொன்னார். சம்பவத்திற்கு மறுநாள் போலீசார் விசாரித்ததால் எனக்கு அப்போது மனநிலை சரியில்லாததால் அதுபற்றி போலீசாரிடம் நான் சொல்லவில்லை. போலீசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்.

**1, 3, 4, 6, 7, 8, 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தன்று மதியம் 12.30 மணிக்கு என் கணவர் போன் செய்து நெல்பேட்டைக்கு வரச்சொன்னதாக போலீசார் விசாரணையில் சொன்னேனா

என்றால் சொல்லவில்லை. போலீசார் விசாரணையில் CCTV போட்டு காட்டப்பட்டதாகவும், நான் அடையாளம் காட்டியதாகவும் குறிப்பிட்டு சொன்னேனா என்று கேட்டால் சொன்னேன். எனது மகன் அலெக்ஸ்பாண்டியன் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். என் மீது கஞ்சா வழக்கு உள்ளது என்று சொன்னால் அண்ணா நகர் காவல்நிலைய குற்ற எண்.660/2021 வழக்கு இருந்தது. அதில் விடுதலை ஆகிவிட்டதாக சாட்சி கூறுகிறார். என் கணவர் மீது கொலை வழக்கு மற்றும் கஞ்சா வழக்குகள் நிலுவையில் இருந்தது என்று சொன்னால் அது சரியல்ல.

சபாரத்தினம் பயலுங்க கஞ்சா வியாபாரம் பார்ப்பதாகவும் அதை செய்யக்கூடாது என என் கணவர் தடுத்ததாகவும், அவர்கள் லோடு சிக்கி விட்டதாகவும், அதற்கு தான் என் கணவர் காரணம் என்பதாகவும் என் கணவர் என்னிடம் சொன்னதாக இந்த வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. சம்பவ இடத்திற்கு 2.30 மணிக்கு சென்றதாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை அனுசரிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.**

Sd/- மகாலெட்சுமி

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.